இனப்பிரச்னை: அமெரிக்கா - இலங்கை பேச்சு

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 85 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 30 இதழ் 241
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16 10 — 1993

(வாஷிங்டன்)

இலங்கையின் இனப்பிரச்னை தொடர்பான பேச்சுவார்த்தைகளை அமெரிக்க அரசு இலங்கை அரசுடன் மேற்கொள்ளவுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்துள்ளன.

நற்பொழுது அமெரிக்கா வுக்கு விஜயம் செய்திருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் அமெரிக்க அரசு

(4-ம் பக்கம் பார்க்க)

லண்டனில் ரணிலுக்கு பலத்த பாதுகாப்பு

(லண்டன்)

லண்டன் வழியாக வாஷிங்டனுக்கு பயணம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு லண்டனில் பலத்த பாதுகாப்பை ஸ்கொட்லாண்ட் யார்ட் பொலிசார் வழங்கியதாக பொழுதுப் செய்திகள் தெரிவிக்கின்றன

லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் ரணில் விக்கிரமசிங்கா தரித்து நின்றபோது எவரும் அவரைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை.

வாஷிங்டனில் நடைபெற வுள்ள பொதுநலவாயத் தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்ள ரணில் விக்கிரமசிங்க சென்றபோது அவர் லண்டனில் தரித்து நின்றார்.

(பி)

● 'ஒபரேஷன் யாழ்தேவி' பாணியில்

வடக்கில் முக்கிய நகரைத் தாக்க

இராணுவ திட்டம் தயாராகிறது!

உயர் அதிகாரிகள் குழு நடவடிக்கை

(கொழும்பு)

வடபகுதியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முக்கிய நகரம் ஒன்றைத் தாக்குவதற்கான திட்டம் ஒன்றை இராணுவம் தற்போது தயாரித்து வருவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இராணுவத்தின் உயர் மட்டத்தில் உள்ள அதிகாரிகளைக் கொண்ட ஒரு விசேஷ குழுவினால் இந்தத் திட்டம் இப்போது தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட "ஒபரேஷன் யாழ்தேவி" நடவடிக்கையின் போது கிடைத்த அனுபவங்களை அடிப்படையாகவைத்து இந்தப் புதிய தாக்குதல் திட்டம் மிக்க அவதானத்துடனும், நுணுக்கத்துடனும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்துக்கென இராணுவத்தில் பல படை

4-ம் பக்கம் பார்க்க)

மலையகப் பகுதியில் தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கிறிஸங்காவில் மலையகப் பகுதியில் வடக்கு—கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்

மலைகத்தின் கண்டி, தம்பதெனியா, மாத்தளைப் பகுதிகளில் கைது நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

தலைநகர் கொழும்பிலும் தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

—பி

புத்தாண்டில் தாக்குதல்? பெருமளவு மக்கள் பலியாவர்

(லண்டன்

எதிர்வரும் புத்தாண்டில் யாழ்ப்பாணம் மீது பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படலாம் என்று லண்டனிலிருந்து வெளிவரும் 'பிளுன்ஸியக்ஸைட்ஸ்' என்ற சஞ்சிகை தெரிவித்துள்ளது.

இந்தச் சஞ்சிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை இராணுவம் மிக விரிந்தளவில் பேரிட்டு வருகிறது. இந்தப் போரில் இராணுவம் பலவீனமடைந்துள்ளது. மேலும் பல்வேறு சாவமுற்றிருக்கிறார்கள். இதனால் இராணுவம் பலவீனமடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் மீது மேற்கொள்ளப்படவிருக்கும் பெரிய இராணுவ நடவடிக்கையினைத் துப்பாக்கி பொருந்திய ஹெலி

(2-ம் பக்கம் பார்க்க)

ஏழைப் படையினரே போரில் இறக்கிறார்கள்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தத்தில் இறப்பவர்கள் ஏழைப் படையினரே என மேல் மாகாண சபை முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

ஆட்கொணர்வு அதிகாரத்தில்

சந்திரிகா கவலை

மரவே படையினர் இறக்கின்றனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஆட்கொணர்வு அதிகாரம் ஆக்கியிருப்பதற்காகஇப்போதை தொடர்கின்றார்கள் என்றும் அவர் குறறம் சாட்டினார். ரி

வவுனியா பண்டாரிக்குளம் ராணுவத்தால் சுற்றிவளைப்பு

(வவுனியா)

வவுனியா பண்டாரிக்குளம் கிராமம் சிறிலங்கா இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு பூரண சோதனைக்கு உள்ளாக்கப்படுகிறது.

கடை வழியின் மத்தியில் பண்டாரிக்குளத்திலுள்ள சகல மக்களையும் அதிகாலை

(4ம் பக்கம் பார்க்க)

★ வடக்கு கிழக்கு பற்றிய

தவறான செய்திகளை அரசு தெற்கில் பரப்பி வருகிறது

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பற்றிய தவறான செய்திகளை அரசு கிங்களவர்களிடையே மத்தியில் பரப்பி வருகின்றது தமது தரக்குறைவுகளால் விடுதலைப்புலிகள் இறப்பதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் நாளாந்தம் பொது மக்கள் இறப்பதையே அங்கு காணக்கூடியதாகஇருக்கிறது என்று வாழ்ப்பாணம் வந்து திரும்பியுள்ள 'ராவய'

(4-ம்பக்கம் பார்க்க)

குண்டு கொண்டு சென்றவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

அண்மையில் கொழும்பு முகத்துவாரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட வெடிகுண்டை கொண்டுவந்த பெரிஞன்டோ என்பவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு பாரியகொட பொலிசாரினால் இவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

முகத்துவாரத்தில் சந்து ஒன்றில் அமைந்திருந்த வீடொன்றில் வைத்து இவர் கைது செய்யப்பட்டார்.

இவர் கைதுசெய்யப்பட்டபோது இவரிடம் குண்டு, துப்பாக்கி மற்றும்

(4-ம் பக்கம் பார்க்க)

"தமிழீழக் கோரிக்கையை தொடர்ந்தும் ஆதரிப்பேன்"

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தமிழீழக் கோரிக்கையை நான் தொடர்ந்தும் ஆதரிப்பேன் என்று திரு வை. கோபாலசாமி அறிவிப்பு

கோபாலசாமி பிரசுரமாக பத்திரிகையாளர்களிடமிருந்து கூறியுள்ளார்.

1984ம் ஆண்டு புதுக்கோட்டையில் நடைபெற்ற தி. மு.

(4-ம் பக்கம் பார்க்க)

புத்தளம் மாவட்டத்தில் பாதுகாப்பு தீவிரம்

(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தில் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் முறியடிப்பதற்கான நடவடிக்கைக தீவிரப் படுத்தப் படுகின்றதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்நடவடிக்கையில் ஈடு

(4-ம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

விற்பனைக்கு

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நோயாளி தள்ளுகதிரை (Wheel Chair) விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும் பரணி மருந்துச்சாலை, யாழ்ப்பாணம். (சி-ஏ3487)

O/L கணிதம் 92, 93

Distinction, Credit பெறுபேறுடன் வினாவுடை திருத்தல் மூலமும் ஆரம்பத்திலிருந்து மீட்டல் முறைப்படியும் B. Sc(Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (சி-519)

விற்பனைக்கு

(1) 10 அடி 8 அடி நீளமான இரண்டு தனி முதிரைக் கண்ணாடி அலுமாரி, (2) 5 அந்தர் அவெரி நியு மொடல் தராசு விற்பனைக்குண்டு. சி. பரமசாமி வெற்றிலை வியாபாரம், மார்க்கட், பெரிய கடை, யாழ்ப்பாணம். (சி-521)

COMPUTER கல்வி

Diploma in Computer Programming - Basic Language புதிய பிரிவு ஆரம்பம்- 17-10-93 8-30 மணி. C. I. M. A., I. A. B, வகுப்புகள் நடைபெறுகின்றன. உயர்தரான கல்விக்கு School of Business Administration, 16, 3வதுகுறுக்குவீதி, யாழ்ப்பாணம். (சி-526)

அக்டோபர் வியாழன், சனி மாற்றங்கள்

12-10-93 வியாழ மாற்றம் 15-10-93 சனிவக்கிரமாற்றம் 31-10-93 வெள்ளாய்மாற்றம் எங்கும் விற்பனையாகின்றது. ரூபா 10/- ஆர்க்கர் ஸ்ரேசனர்ஸ், கன்னாகம். நூலாசிரியர் "சத்யா" (சி-525)

"வித்தியாரம்பம்- மரநடுகை"

வித்தியாரம்பத்திற்கு அரிச்சுவடி ஏடுகள், மரநடுகைக்கு மரக்கன்றுகள் தருகின்றோம். மரக்கன்றுகள் பதிய வைப்பதற்கு அவசியமான வெற்றுப் பாலிதீன் பக்கெற்றுகள் தந்து உதவுகின்றோம். "மிக்கவைற்" (ஏ--3502)

நீமாரொக்ஸ் நுளம்பு விரட்டி

குப்பி விளக்கில் விடிவு எரிக்க ஒளி தரும் விளக்கமாகவும், விளக்கிலிருந்து கிளம்பும் புகை நுளம்பு விரட்டியாகவும் பயன் தருகிறது. நீமாரொக்ஸ் பாவித்து நிம்மதியாகத் தூங்குங்கள். அண்ணாரேப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது. போத்தல் ரூ 90/- டசின் போத்தல் கொண்ட பெட்டி ரூ 960/- ஒரு மிக்கவைற் தயாரிப்பு. (ஏ-3497)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பதவி வெற்றிடம்

உதைபந்தாட்டத்திற் இடைவரவு விரிவுரையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேக்ஷகர்களிடமிருந்து 1993 நவம்பர் 18 ஆம் தேதி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

கொடுப்பனவு விகிதம்: மணித்திபாலத்திற்கு 75/- ரூபா (மாதவொன்றிற்கான உச்ச அளவு 900/-ரூபா

நிதிக்கிணங்க 20/-) ரூபாவைச் செலுத்திய பின்னர் இப்பல்கலைக் கழக தாபனக்கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளின் அலுவலகத்தில் மேற்குறித்த பதவிக்கான விண்ணப்படிவத்தையும் இதர விபரங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும். படிவத்தையும் இதர விபரங்களையும் தபால் மூலம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமான காசுக்கட்டளை/தபால் தலைகளுடன் 23X10 செ.மீற்றர் அளவுடையதான முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட வடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்களிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவத்தில் அனுப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதியின்பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவில்லாத வாறு விபரங்கள் அளிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குறிப்பு: சாதிறிதழ்களின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-10-07
(ஏ-3500)

புதிய பாலர் பாடசாலை

கொழும்புத்துறை

கட்டப்பிராய் சரஸ்வதி சனசமூக நிலையத்தின் புதிய பாலர் பாடசாலை அமைவிடம் யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரம் டிவகலாவினால் திறந்து வைக்கப்பட்டது. (154)

12 பத்திரிகைகளுக்கு ரஷ்யாவில் தடை

(மாஸ்கோ

ரஷ்யாவில் 12 எதிர் தரப்பு பத்திரிகைகள் மீது பத்திரிகை தகவல்துறை அமைச்சகம் தடை விதித்திருக்கின்றது பிரபலமான இரண்டு கம்யூனிஸ்ட் தினசரிகளின் ஆசிரியர்களும் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்கள்.

ரஷ்ய பழைமைவாதிகளைப் பின்பற்றும் 15 செய்தி ஏடுகளும், ஒரு ரெலிவிசன் நிகழ்ச்சியும் நிரந்தரமாக மூடப்படுமென்றும் அரசாங்கம் அறிவித்திருக்கின்றது

அதிபர் பொறிஸ் ஜெல்சினுக்கு எதிராக இயங்கியமையே இந்தப் பத்திரிகைகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-சி)

நவராத்திரி மகிமை

நவராத்திரிவிரதம் ஆண்டு தோறும் புரட்டாதி மாதம் பூரண பக்கம், பிரதமை முதல் தசமிவரை ஒன்பது தினங்கள் சக்தியை நோக்கி அனுட்டிக்கும் விரதமாகும். இதன் தாற்பரியம் பற்றிப் பேசப்படுவது யாதெனில் இறைவி மகிடாசுர வதத்திற்காக ஒன்பது தினங்கள் தவமிருந்ததாகவும், உருத்திரி, இலக்குமி, சரஸ்வதி முதலாய நாமங்களுடன் மும்மூன்று தினங்கள் தபசு நிகழ்த்தினதாகவும் இறுதி நாளில் போர்க்கோலம்பூண்டு மகிடாசுரனைச் சங்காரம் செய்தார் என்பதும் அனைவரும் அறிந்த சரிதையாகும்.

இதனைத் தவிர இவ்விரதம் பற்றிய இன்னுமோர் வரலாறு கூறப்படுகின்றது. இது நைமிசாரண்ணிய முனிவர்களுக்குச் சூதமுனிவர் கூறியுள்ளார். அஃதாவது சுமேது என்னும் அரசனும் அவன் மனைவி அநுகவேதியும் அரசை இழந்து நோயினால் பீடிக்கப்பட்டுக் காட்டில் அலைந்து திரிந்த ஞான்று அவர்கள் மேல் இரக்கங்கொண்ட ஆங்கிரசமுனிவர் இதற்கு விமோசனம் அளிக்க விரும்பினார். மூவரைச் சக்திகளும் வாசஞ்செய்கின்ற பஞ்சவடி தீர்த்தக்கரையிலே ஒன்பது தினங்கள் சக்தி பூசை நிகழ்த்தினதாகவும் இதனால் நோய் நீங்கிய அரசனும் மனைவியும் பத்ததிகளவி வழித்துச் சூரியப் பிரதாபன் என்னும் ஆண்மகனைப் பெற்றதாகவும் அவன் வளர்ந்து மீண்டும் இழந்த அரசைக் கைப்பற்றினான் எனவும் கூறப்படுகிறது

ஆகவே நவராத்திரி சக்தி வழிபாட்டிற்கு உகந்த காலமாகும். விஜயதசமியன்று வித்தியாரம்பம் செய்வதற்கும் புதுக்கருமங்கள் தொடங்குவதற்கும் சிறந்த காலமாகும். நாமெல்லாம் இறைவியின் நலனுக்கு பெறுவோமாக.

—சிவஸ்ரீ சிவகடாக்ஷ கணேசலிங்கக்குருக்கள்
பிரதம சிவாச்சாரியார்
காகிவிநாயகர் தேவஸ்தானம்)

நவராத்திரி விழா

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணிவைத்தி அருள் மிகு ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆலய நவராத்திரி பூசை வழிபாடுகள் இன்று 16ம் திகதி சனிக்கிழமை மாலை பூசை ஆராதனை வழிபாட்டுடன் ஆரம்பமாகும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் இன்று 16ம் திகதி சனிக்கிழமை தொடக்கம் நவராத்திரி கொலுப்பூசை மாலை 5- மணிக்கு ஆரம்பித்து 23ம் திகதி சனிக்கிழமை மாலை சூரசம்ஹாரமும் ஞாயிற்றுக்கிழமை விஜயதசமியன்று மாலை மானம் பூ உற்சவமும் நடைபெற்று தொடர்ந்து வெளி நோன்பு பூசையும் ஆரம்பமாகும்.

0 0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஆத்திமபதி அருள்மிகு ஸ்ரீ சந்திர சேகரர் விநாயகர் ஆலயத்தில் இன்று 16ம் திகதி சனிக்கிழமை மாலை நவராத்திரி பூசை ஆரம்பமாகும். (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை அருள் மிகு ஸ்ரீ துர்காதேவி கோவிலில் இன்று 16ம் திகதிசனிக்கிழமை மாலை நவராத்திரி விழா ஆரம்பமாகும்.

0 0 0

(கொழும்புத்துறை)

தெல்புரம் கொட்டடியம்பதி அருள் மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்பாள் கோவிலில் நவராத்திரி வழிபாடு விசேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெறும். -154

புத்தாண்டில்

(1ம் பக்கம் தொடர்ச்சி)

கொப்டர்கள், தரைவிறங்கு தளங்களான வாகனங்கள் சோந்துப் பணிக்குப் பயன்படும் விமானங்கள் செல்லும் படகுகள் என கூறுதல் இராணுவ தளபாடங்களை இராணுவம் வாங்கவதி திட்டமிட்டுள்ளது.

இராணுவத்தின் முக்கிய கருமங்கள் சிவில் யாழ்ப்பாணத்தை தாம் கைப்பற்ற முடியும் என்றும் வேறுசில அதுபவங்களை எனவு என்றும் நினைக்கிறார்கள். இலகுவாக காரியம் என்று கூறுபவர்கள் ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறார்கள். 1980 களில் சில எண்ணிக்கையுடன் கூடிய விடுதலைப்புலிகள் ஒரு லட்சத்து இருபதாயிரம் இந்திய படைகளை போரிட்டு வெற்றி பெற்றதை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்

இவ்வாறான ஒரு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அதற்கு கொடுக்க வேண்டிய விலை மிக மிக அதிகமாகவே இருக்கும். மிகப் பெரிய அளவிலான ஆட்சேதம் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நம்பிக்கையை இழந்து வெருண்டோடும்நிலை பாதகமான பண்ணாட்டு உணர்வுகளென இவையெல்லாமே தாங்க முடியாத அளவிற்கு விலை கொடுக்கவேண்டியிருக்கும்.

யாழ்ப்பாணத்தை படையினர் முற்றுகையிட்டால் மிகவும் கொடூரமான போர் நிகழும் இதில் பெருமளவு பொதுமக்கள் பலியாவார்கள் என்றும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

0 0 0

(கொழும்புத்துறை)

பொன்னாலை அருள் மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவிலில் இன்று 16 ம் திகதி சனிக்கிழமை நவராத்திரி பூசை ஆரம்பமாகும். (154)

நன்றி நவிலல்

மிருதங்க அரங்கேற்றம்

செல்வன் நி. மதிரூபன்

10-10-93 நடைபெற்ற எங்கள் மகன்/ பெருமகன் நி. மதிரூபனின் மிருதங்க அரங்கேற்றத்துக்குச் சிறப்புச் செய்த குரு பிரம்மஸ்ரீ அ. நா. சோமாஸ்கந்த சர்மா, தலைவர் திரு. சபா ஜெயராஜா, பிரதமவிருந்தினர்கள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, யாழ் மாநகர ஆணையாளர் பாலசிங்கம், கலைநிதி கோபாலகிருஷ்ண ஐயர், வாழ்த்துரை வழங்கிய மிருதங்கமணி எம். என். செல்வத்துரை, ச. முத்துவிங்கம் ஜே. பி., ஆய்வுரை நிகழ்த்திய பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர், இசை, வாத்தியக் கலைஞர்கள் திருவாளர்கள் கணபதிப்பிள்ளை, ரமதாகிருஷ்ணன், மகேந்திரன், கமலதாஸ் செல்வரத்தினம், சிறந்த ஒலி, ஒளி வழங்கிய ஊரெழு கண்ணகி அம்மன் ரேயக் சவுண்ட் சேவிஸ், இணுவில் பராராஜசேகரப்பிள்ளையார் கல்யாணமண்டப நிர்வாகிகள், குருக்கள் திரளாக வந்து வாழ்த்தி மாலை அணிவித்து, பரிசில் வழங்கியோர், இசைவேளாளர், கலைஞர் அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி.

திரு. திருமதி
க. நித்தியானந்தன்,
பெற்றோர்,
உடுவில்.

திரு. திருமதி
ஆ. கல்யாணசுந்தரேசன்,
பெரியதாய், தந்தை,
மருதனாமடம்.

(சி-523)

பெண்மைக்கு மெருகேற்றும் இளமைக்கு எழிலூட்டும் தங்க நகைகளின்
தங்கச் சுரங்கம் - தங்கநகை உலகில் சோபனா நகைமாளிகை....

சோபனா நகை மாளிகை

116V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ உன்னதமான நகைகளை எழிற்கோலத்துடன் செய்துகொள்வதற்கு நாடுங்கள் (ஏ-3503)

மணிவரக்கு

துணிவு வளர்வது, எண்ணிக்கையில் இருந்து அல்ல; இதயங்களில் இருந்துதான்.
— ஜான் ட்ரூடன்.

நமது நோக்கு

மொழியுரிமை படும்பாடு!

சில ஆண்டுகளுக்கு முன் கொழும்பு அரச அதிபர் அலுவலகத்திற்கு ஒருவர் சென்றார். கிராம மொழியில் மாத்திரம் ஒரு அறிவிப்பு இருந்தது.

சிங்களம் தெரியாத அவர் அருகிலிருந்த விதிதிடம் சென்றார். அதில் என்ன எழுதப்பட்டிருக்கின்றது என்பதை ஆங்கிலத்தில் கேட்டார்.

"கிராமம் தெரியாதா?"— இது அந்த விதிதின் கடுகடுப்பான கேள்வி: தெரியாது என அவர் மீண்டும் சொன்ன போது கிடைத்த பதில் என்ன தெரியுமா?

"போய்ச் கிராமம் படித்து விட்டு வா!"

இந்த அனுபவத்தைப் பெற்றவர் ஓர் ஓய்வு பெற்ற நீதியரசர் சர்வதேச நீதி ஆணைக் குழுவிற்கு அவர் அனுப்பிய அறிக்கையில் இச் சம்பவம் விபரிக்கப்பட்டிருந்தது.

நிர்வாகமான அளவு தமிழ் உபயோகச் சட்டம் நிறைவேற்றப்பட்டும் அதற்கான நடைமுறை விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்க 'இழுத்தடிப்புகள்' நடைபெற்றன.

சர்வதேச மட்டத்தில் பல கண்டனக் குரல் எழுப்பப்பட்ட பின்னர் சட்டப் புத்தகத்தில் தமிழுக்கும் சில உரிமைகள் வழங்கப்பட்டதாக அறிவிப்புகள் வந்தன.

தமிழ் தகவுச் சுவடி இல்லை; போதியளவு மொழி பெயர்ப்பாளர்கள் இல்லை என்பன போன்ற பல சாட்டுகள் கூறப்பட்டு, அமுலாக்கம் பூரணமாகச் செயற்பட விடவில்லை.

உதாரணத்திற்கு ஒரு சம்பவம். தாதியர்களுக்கு ஓய்வுபெறும் வயதை அறுபது ஆக நீடிக்கும் சுற்றறிருபம் வர்த்தமானியினூடு தனிச் சிங்களத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றது.

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசாங்க வைத்திய சாலைகளுக்கு, மொழி பெயர்ப்புக்கூட இணைக்கப்படாமல், தனிச் சிங்களச் சுற்றறிருபம் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகச் செய்தி வந்துள்ளது.

இந்த லட்சணத்தில், தமிழர்களின் பல பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட்டுள்ளன என்று தென் பகுதித் தலைவர்கள் பேசுவதில் நியாயமிருக்கின்றதா?

இன்றுள்ள நிலைமையை முற்றாக உணராது, தமிழர்கள் போராடுவதை கேலி செய்தும், இன்னும் என்ன வேண்டுமாம் என கிண்டல் செய்தும் தென் பகுதிப் பத்திரிகைகள் எழுதுவதில் என்ன நியாயமிருக்கின்றது?

வன அழிப்பு-ஓர் சன அழிப்பு

★ இன்று உலக உணவு தினம்

உணவில்தன்னிறைவும்சுபீட்சமும்காண எமது வளங்களை பயன்படுத்துவோம்

வறுமை பட்டினி, ஊட்டக்குறைவு ஆகியவற்றை அடியோடு ஒழித்து உணவில் தன்னிறைவும், சுபீட்சமான வாழ்வும் உண்டு பண்ணும் நோக்கோடு இன்று உலகம் பூராவும் ஐக்கிய நாடுகள் சபையின் வேண்டுகோளுக்கிணங்க 'உலக உணவுதினம்' கொண்டாடப்படுகின்றது.

இந்தத் தினம் 1945ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையால் முதன் முதலாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையைப் பொறுத்த மட்டில் 25,332 சதுரமைல் விஸ்தீரணம் கொண்டது ஆனால் 44 சதவீத நிலம்தான் விவசாயம் செய்யப்படும் நிலங்களாக உள்ளன. காடுகள் 20 வீதமும், வீடுகள் வீதிகள் அமைந்தது காரணமாக 11வீதமும், வெற்று நிலங்களாக 25 வீதமும் உள்ளன.

இதில் வடமாகாணம் 84,220 ஹெக்டேர் நிலம் விஸ்தீரம் கொண்டது. இதில் 1,109,404 மக்கள் வாழ்கிறார்கள். இந்த மக்களில் முக்கிய உணவாக அரிசிக்காக 10 ,149 ஹெக்டேர் காணிகள் நெற்செய்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இப்பொழுது 96,360 ஹெக்டேர் நிலப்பரப்பு நெல் செய்கைக்கூடியதாக உள்ளது. முழுநிலமும் பயிரிடப்படாமல் இருக்கின்றது. இன்று வடக்கு கிழக்கில் அனேகம் போர்கள் போசாக்குணவு குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களை வேறு நாடுகளை நம்பியும் எதிர்பார்க்காமல் எப்படி எம் மக்களை மீட்டுக் கொள்ளலாம் என்று எமது அமைப்புக்கள் ஆராய்ந்து வருகின்ற நல்ல நிகழ்வுகளும் ஏற்பட்டுள்ளன.

இந்தப் போசாக்குணவு குறைபாட்டால் 1991ம் ஆண்டு காலப்பகுதியில் வாழ் போதனை வைத்தியசாலையில் பிறந்த குழந்தைகளில் 23 வீதமான பிள்ளைகள் 2500 கிராமுக்கு குறைவாகவே பிறந்துள்ளார்கள்.

இன்று மக்களுக்கு முக்கியமான அரை இனப் பயிர்களும், மரக்கறிவகைகளும் பயிரிடப்படுவதில் நாம் ஓரளவு தன்னிறைவு அடைந்துள்ளோம். இருந்தபோதிலும் அரை இனப்பயிர்கள், ஓமந்தை புளியங்குளம், நெடுங்கேணி ஆகிய பகுதிகளில் மேலும் 6000—7050 ஹெக்டேர் நிலம் உபயோகிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. இதே போன்று வவுனிக்குளம் துணுக்காய் ஆகிய பகுதிகளில் 2000 3000 ஹெக்டேர் நிலம் பயிரிடப்படலாம். இதனால் போசாக்குணவின் ஓரளவு தேவையை பூர்த்தி செய்யலாம்.

மரக்கறி வகையைப் பொறுத்த மட்டில் வரள் குடா நாட்டில் 38·7% 22745) தரை மரக்கறி பழவகை உள்ளடக்கிய மரக்கறி தொகுதியாகவுள்ளது. உள்ளூர் மரக்கறிவகைகள் பயிரிடப்படுவதில் மற்றப் பிரதேசங்களைவிட நாம் சிறப்பு பெற்று வருவதால் ஏக்கியவலை நாட்டு வெளிநாடு மரக்கறி வகைகளை உண்டாக்குவதில் பேரிய வளங்கள் செலுத்தினால் நாம் தன்னிறைவை அடையலாம்.

உலக உணவு தினமான இன்று தமிழ் மக்களாகிய நாங்கள் எமது வளங்கள் முழுவதையும் பாவித்து அதிகிய பழவகைகளில் மரக்கறி வகைகளிலும் தன்னிறைவடைவதோடு எங்களுக்கு எதிராக பிரயோகிக்கும் 'பொருளாதாரத்தடையை' தகர்த்து அப்பாற் சென்று பசி பட்டினியை போசாக்கின்மையை அறவே நீக்குவோம் என்று திடசங்கல்பம் பூணுவோமாக,

— 'மகரம்'

உள்ளூராட்சி மன்ற அனுமதியின்றி

போசனசாலை, தேநீர்க் கடை அமைப்பதற்குத் தடை

(பருத்தித்துறை)

உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதியின்றி யாழ் மாவட்டத்தில் தேனீர்க்கடைகள், போசன சாலைகள் அமைப்பது தடைசெய்யப் பட்டுள்ளதாக யாழ். பிராந்தியஉள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவலாலா அறிவித்துள்ளார்.

தேனீர்க்கடைகள், போசன சாலைகள் என்பன நகரசபை, பிரதேசசபை உபவிதிகளுக்கு அமைவாக இயங்கவேண்டும் என்றும் அறிவித்துள்ள அவர் நகரசபை, பிரதேசசபை உபவிதிகளுக்கு முரணாக இயங்கும் தேனீர்க்கடைகள், போசன சாலைகளுக்கு வியாபார உரிமை ரத்து செய்யப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து நகரசபைகள், பிரதேசசபைகளின் அதிகாரிகள் சுகாதாரத்திணைக்களத்துடன் இணைந்து தேனீர்க்கடைகள், போசனசாலைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

(52-சி)

நெல்லியடியில்

8 தேநீர்க் கடை, உணவு சாலைகளுக்கு எச்சரிக்கை

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேசசபையும், சுகாதாரத் திணைக்களமும் இணைந்து நெல்லியடிப் பகுதியிலுள்ள தேனீர்க்கடைகள், உணவுச் சாலைகள் மீது மேற்கொண்ட "திடீர்" சோதனையின் போது பிரதேசசபை உபவிதிகளுக்கு முரணாக செயற்பட்ட எட்டுதேனீர்க்கடைகள், உணவுச்சாலைகள் திடீர் சோதனைக் குழுவினரால் எச்சரிக்கை செய்யப்பட்டன.

இத்திடீர்ச் சோதனைக்குழுவில் கரவெட்டி பிரதேசசபைச் செயலாளர் திரு எஸ். இராமலிங்கம், சுகாதாரத்திணைக்களச் சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். சிவபாலன் உட்பட இன்னும் உத்தியோகத்தர்கள் இடம் பெற்றிருந்தனர்.

இத்திடீர்ச் சோதனைக்குழுவினர் இரண்டாம் கட்ட திடீர்ச் சோதனையின் போது பிரதேசசபை உபவிதிகளுக்கு முரணாக இயங்கும் தேனீர்க்கடைகள், உணவுச்சாலைகளுக்கெதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(52 கி)

கூவம் விவகாரம்:

சென்னை நகர் வடிகாலும் மாலைமலராக மாறும்?

(சென்னை)

சென்னை நகரிலுள்ள கூவம் ஆற்றில் வீசப்பட்ட அதிசக்தி வாய்ந்த கதிர் இயக்கக் குப்பிகளில் சேதம் ஏற்பட்டால் சென்னை நகரமும் அதன் சுற்றுப்புறங்களும் மனிதர்களோ, விலங்கினங்களோ உயிர் வாழ முடியாத ஒரு வரண்ட பாலைவனமாக மாறிவிடும் என்று விஞ்ஞானிகள் தற்போது கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

மேற்படி ஆற்றுக்குள் வீசிய கதிர் இயக்கக் குப்பிகளை இன்னும் ஆறு நாட்களுக்குள் வெளியே எடுத்துவிடுவோம் என்று அணுசக்தி ஆய்வு நிறுவனத்தின் தலைவர் திரு. கே. கோபாலகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இந்தக் கதிரியக்கக் குப்பிகளை ஆற்றுக்குள் வீசியதாக சந்தேகத்தில் கைது செய்த மூவர் தடாச் சட்டத்தின் கீழ் விசாரணையின்றி ஒரு வருடம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

—வி—தி

இராசிபலன்

16-10-1993
சனிக்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 30)

பிரதமை பி. ப. 3-45 வரை திதியை மு. ப. 8-33 வரை. இராகுகாலம் காலை 9-02 முதல் 10 32 வரை, சுப நேரம் மாலை 3-02 முதல் 4-32 வரை. மரணயோகம், நவராத்திரி விரதாரம்பம்.

மேஷம்: எண்ணிய கருமம் வெற்றி, மனமகிழ்ச்சி, வெளிவட்

இடபம்: மனஅமைதி குன்றல், நண்பர் தொல்லை, பணக் கஷ்டம்.

மிதுனம்: உள்ளத் தெளிவு, தேகசுகம் பாதிப்பு, அலைச்சல்.

கடகம்: பெரியோர்களால் நன்மை, ஆடம்பர செலவு, குடும்பசுகம்.

சிங்கம்: விண்பயம், யோசனை மிகுதி, மனவெறுப்பு.

கன்னி: அத்தியர் நட்பு, மேலான நிலை, பணப்புழக்கம்.

துலாம்: காரிய தாமதம், வீண் பிரச்னை, புறம் சொல்லல்

விருச்சிகம்: உறவினர் வருகை, தெய்வ தரிசனம், விருந்தோம்பல்.

தனுசு: தருமசிந்தனை வயோதிபர் அறிவுரை, சுப காரியம்.

மகரம்: அதிகாரிகள் துயர், சகோதரர் வெறுப்பு, கவலை.

கும்பம்: துயர் அதிகம், கண்ணில் ரோகம், விதண்டாவாதம்.

மீனம்: முதன்மையான செயல், குடும்ப மகிழ்ச்சி, பிறர் உதவி.

— ஜோஸ்யர்

மழையினால் ஆகதிகள் பாதிப்பு

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் நற்போதய மழையினால் குருநகர் - கலுப்பாந்தி, பண்ணை வீதி - கடற்கரைவீதி ஆகியவற்றிலுள்ள இடிபாட்டுக் கட்டடங்களில் தங்கியுள்ள அகதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. -59

இன்று

(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய நவராத்திரி விழா இன்று ஆரம்பமாகின்றது.

இந்த ஒன்பது நாளும் அம்பாளுக்கு பால் விசேட அபிஷேக ஆராதனைகளும், இதன் பின் அன்னை வீதிஉலா வரும் அலங்கார காட்சியும் இடம் பெறும்.

0 0 0

(அரியாலை)

யாழ். வண்ணை வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் இன்று 16ம் திகதி சனிக்கிழமை புரட்டாதி மாதக் கைச்சனி நடைபெறுகின்றது. (59)

0 0 0

(பருத்தித்துறை)

புலோலி பகுபதீஸ்வரர் ஆலயத்தில் (கிவன் கோயில்) இன்று 16ம் திகதி 5ம் புரட்டாதிச் சனிற் திருவிழாவும் நவராத்திரி விரத ஆரம்பமும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட பேக்கரி ஊழியர் பேரவையின் கலந்துரையாடல் கூட்டம் ஒன்று இன்று 16ம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு இணுவிலிலுள்ள தலைமைச் செயலகத்தில் நடைபெறும். (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

ஏழாலை- கனகாலையடி அருள்மிகு ஸ்ரீ வசந்த மாரபூசணி அம்பாள் தேவஸ்தானத்தில் இன்று முதல் நவராத்திரி விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. நவராத்திரி காலத்தில் தினமும் மாலையில் காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் தமிழருவி திரு. த. சிவகுமாரன் தெய்வீகத் தொடர் பேருரைகளை நிகழ்த்துவார். (கி)

பாகிஸ்தானில்

சுயேச்சை எம். பி. யின் பெறுமதி 2 கோடி ரூபா

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஒருநாடாளுமன்ற உறுப்பினருக்கு 2கோடி ரூபா விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில் திருமதி பெனுசிர் பூட்டோவின் கட்சியினரும், நவாஸ் செரிப் கட்சியினரும் அறுதிப்பெரும்பான்மை பெறுதலால் இந்த இரு கட்சிகளும் அரசாங்கம் அமைப்பதற்கு சுயேச்சை உறுப்பினருக்கு 2 கோடி ரூபா விலை கொடுத்து, அரசாங்கம் அமைப்பதற்கு தீவிரமுயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

புதிய பிரதமர், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தெரிவு செய்யப்படவிருக்கும் இந்த வேளையில் பெனுசிர் பூட்டோவின் கட்சியினர் இரண்டரை வருடங்களும், நவாஸ் செரிப்பின் கட்சியினர் இரண்டரை வருடங்களும் ஆட்சி அமைக்கும் யோசனை ஒன்றை பாகிஸ்தான் இராணுவம் முன்வைத்துள்ளது. (ம-கி)

மீனவர்கள் தாக்கப்பட்டால்

தமிழகத்தில் பெரும் கிளர்ச்சி வெடிக்குமென எச்சரிக்கை

(சென்னை)

"தமிழக மீனவர்கள் இனிமேல் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டால் தமிழ்நாட்டில் சகிடமும் ஒழுங்கும் சீர்குலைந்துவிடும் வகையில் தமிழ்நாட்டு மக்கள் மாபெரும் கிளர்ச்சியில் ஈடுபடுவார்கள்."

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, பிரதமர் திரு நரசிம்மராவுக்கு நேற்று முன்தினம் எழுதிய கடிதம் மூலம் எச்சரிக்கை செய்துள்ளார்.

மேற்படி விடயம் சம்பந்தமாக இந்திய—இலங்கை அதிகாரிகளிடையே தற்போது புதுடில்லியில் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் இவ்வேளையில் முதலமைச்சர் இவ்வாறான ஒரு கடிதத்தை பிரதமருக்கு அனுப்பியிருப்பது குறிப்பிடத்தக்கது. —கி-கி

அனுராவின் தற்போதைய நிலைக்கு அவரே பொறுப்பு

சு. க. செயலாளர் கருத்து

(தொழும்பு)

அனுரா பண்டாரநாயக்கா தற்போது எதிர்நோக்கியுள்ள நிலைக்கு அவரே பொறுப்பேற்கவேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலரும், நாடாளுமன்ற எம் பி. யுமான திரு. தர்மசிறி சேனநாயக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;-

அனுரா பண்டாரநாயக்கா தரப்பு ஏற்பட்ட நிலையை மாற்றுவதற்காக கட்சியும், அதனைச் சார்ந்தவர்களும் பழி சுமத்துவது எந்த விதத்திலும் நியாயமற்றதாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் எவருக்குமே மறுக்கப்படாத அந்தஸ்தும், சலுகைகளும் அநுராபண்டாரநாயக்காவுக்கு அவரது அரசியல் வாழ்நாளில் வழங்கப்பட்டது.

இவற்றை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வாது வேறு ஒருசோணத்தில் செயற்பட்டதாலேயே அவருக்கு இந்தநிலை ஏற்பட்டது. (இ-கி)

வாந்திபேதி அதிகரிப்பு

யாழ். ஆஸ்பத்திரியில்

இடப்பற்றாக்குறை!

(யாழ்ப்பாணம்)

நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கும் வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்டோர் தொகையினால் யாழ். ஆஸ்பத்திரியில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதற்கென யாழ் ஆஸ்பத்திரியில் ஒதுக்கப்பட்ட விடுதிகளில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் அவ்விடுதிகளை மூடி விஸ்தீரணம் கூடியவிடுதி ஒன்று இதற்காக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

ஆண்கள் கண் சிகிச்சை விடுதி மாற்றப்பட்டு தேற்று முதல் அவ்விடுதியில் வாந்திபேதி விடுதி அமைக்கப்பட்டுள்ளது.

ஆண்கள் என் சிகிச்சை விடுதி பெண்கள் கண் சிகிச்சை விடுதிக்கும், பெண்கள் சிகிச்சை விடுதி மகப்பேற்று விடுதியின் ஒரு பகுதிக்கும் மாற்றப்பட்டுள்ளது.

ஒபரேஷன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யணங்களை அமைப்பதற்கும் அரசு அனுமதியளித்துள்ளது.

இதேவேளையில் கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் ஆண்டு பெப்ரவரி மாதம் சபை உள்ளூராட்சி தேர்தல்களையும் நடத்துவதற்கு ஏற்ற விதமாக திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு இராணுவம் முடிவுசெய்துள்ளதாகவும் அந்த செய்திகள் மேலும் தெரிவித்தன. இ-கி

கிளார்க், மண்டேலாவுக்கு இவ்வருட நோபல் பரிசு

(லண்டன்)

1993-ம் ஆண்டுக்கான நோபல் சமாதானப் பரிசை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவும் தென்னாபிரிக்க ஜனாதிபதி எஸ். டபிள்யூ. டி. கிளார்க்கும் பெற்றுள்ளார்கள்.

67 வயதுக் கிறவுன் பெறுமதியான இந்தப்பரிசு இவர்கள் இருவருக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

தென்னாபிரிக்காவில் நிறவேற்றுமைக் கொள்கையை அகற்றுவதற்கு இரு தலைவர்களும் எடுத்த முயற்சிகளையே இந்தப் பரிசு வழங்கப்படுவதாக நோபல் பரிசுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (வி)

நொத்தாரிஸ்

சட்டத்தரணிகளுக்கான

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சட்டத்தரணிகள், உறுதி எழுதும் நொத்தாரிஸ் ஆகியோர்களுக்கான முக்கிய சந்திப்பு எதிர்வரும் 20 ம் திகதி காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் நடைபெறவிருப்பதாக அனைத்து சட்டத்தரணிகளையும், நொத்தாரிசுகளையும் தவறாது சமூகமளிக்குமாறு தமிழீழ நீதி நிர்வாகத்துறையினர் கேட்டுக்கொள்கின்றனர். (வி)

தமிழ்ழம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

க. மாநாட்டிலும், இதைத் தொடர்ந்து மதுரையில் நடைபெற்ற தி. மு. க. மாநாட்டிலும் தனித் தமிழீழக் கோரிக்கைக்கு பூரண ஆதரவு வழங்கப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகவும் திரு கோபாலசாமி சுட்டிக்காட்டினார்.

இம் மாநாடுகளில் தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி பேசுகையில் ஈழத்தமிழ் மக்களின் பிரச்னையை தீர்ப்பதற்கு தனித் தமிழீழம்தான் ஒரேவழி என்று கூறியுள்ளார் என்றும் திரு கோபாலசாமி பத்திரிகையாளர்களிடம் மேலும் கூறினார். —வி-கி

கட்டுவன், தெல்லிப்பழை கரிக் ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் தெல்லிப்பளைப் பகுதியிலிருந்து இராணுவத்தினர் நேற்று நள்ளிரவு 12 30 மணிக்கு அளவெட்டிப் பகுதியை நோக்கி ஷெல்தாக்குதலை மேற்கொண்டனர்.

அளவெட்டி வடக்கு, குருக்கள் கிணற்றடி, கிழக்குப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. சுமார் 6 ஷெல்கள் இப்பகுதிகளில் விழுந்து வெடித்தன. (நி)

611 தபால் பொதிகளுடன் இன்று 'வாதுவ' வருகிறது

(கொழும்பு)

'வாதுவ' என்ற கப்பல் 611 உள்நாட்டு, வெளிநாட்டு தபால் பொதிகளுடன் நேற்று முன்தினம் காலை கொழும்பிலிருந்து புறப்பட்டது.

இக்கப்பல் இன்று பருத்தித்துறை வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் பல மெற்றிக் தொன் உணவுப் பொருட்களும் எடுத்துவரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. —சி-கி

தமிழக அரசு

ஈழ அகதிகளுக்காக

ரூ. 55 கோடி செலவு

(சென்னை)

தமிழ்நாடு அரசு இலங்கை அகதிகளுக்காக இதுவரை 55 கோடி ரூபாவை செலவு செய்துள்ளதாக தமிழ்நாடு வருவாய்த்துறை அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் இலங்கை தமிழ் அகதிகள் 337 முகாம்களில் பராமரிக்கப்பட்டு வந்தார்கள். அகதிகள் தற்போது இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவதால் முகாம்களில் எண்ணிக்கை 137 ஆகக் குறைந்துள்ளது. எதிர்வரும் டிசம்பர் மாதம் மூவாயிரம் அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவிருப்பதாகவும் வருவாய்த்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். —வி-கி

சுருக்கிட்டு தற்கொலை

(யாழ்ப்பாணம்)

சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக கருதப்படும் ஒருவரின் சடலம் நேற்று காலையாழ். ஆஸ்பத்திரியில் காவல்துறையினரின் உதவியுடன் ஒப்படைக்கப்பட்டது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அற்றோனிமுத்து மேரி பிரான்சிஸ் (50 வயது) என்பவரே சடலமாக ஒப்படைக்கப்பட்டவரென அடையாளம் காணப்பட்டுள்ளது. —வி

திட்டமிடல் பரீட்சை ரத்து

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்மஸ் அரசினால் நடாத்தப்பட இருந்த திட்டமிடல் சேவையாளருக்கான வினாத்திறன் பரீட்சை ரத்து செய்யப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (162-வி)

புகைப்பட கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றுச் சம்பவங்களை சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சி இன்றும், நாளையும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் இக்கண்காட்சி நடத்தப்படுகிறது.

லவுனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேளையில் அவர்களது வீடுகளை விட்டு பலவந்தமாக வெளியேற்றினர்.

கடந்த புதன்கிழமை அதிகாலை 4 மணியளவில் அடை மழையின் மத்தியில் மக்கள் வெளியேற்றப்பட்டபின் வீடுகள் யாவும் சோதனை செய்யப்பட்டன.

வெளியேற்றப்பட்ட மக்கள் ஆண் பெண் வேறுபாடின்றி முழுமுடி அணிந்த ஒருவரின் முன் நிறுத்தப்பட்டனர்.

இச் சோதனையின் போது பலர் காணாமல் இருக்கலாம்என நம்பப்படுகிறது. (வி)

பக்கங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படையினரும், பொலிசாரும் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பாதுகாப்பு காரணங்களுக்காக புத்தளம் கடலேரியில் மாலை 6மணிக்குப் பின் மீன் பிடிக்க விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. —வி

கட்டுவன், தெல்லிப்பழை கரிக் ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் தெல்லிப்பளைப் பகுதியிலிருந்து இராணுவத்தினர் நேற்று நள்ளிரவு 12 30 மணிக்கு அளவெட்டிப் பகுதியை நோக்கி ஷெல்தாக்குதலை மேற்கொண்டனர்.

அளவெட்டி வடக்கு, குருக்கள் கிணற்றடி, கிழக்குப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. சுமார் 6 ஷெல்கள் இப்பகுதிகளில் விழுந்து வெடித்தன. (நி)

திட்டமிடல் பரீட்சை ரத்து

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்மஸ் அரசினால் நடாத்தப்பட இருந்த திட்டமிடல் சேவையாளருக்கான வினாத்திறன் பரீட்சை ரத்து செய்யப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (162-வி)

குண்டு கொண்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரலையில் இருந்ததாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தற்கொலைப் படைப் பிரிவின் பத்து பேர் கொழும்பு வந்துள்ளதாக விசாரணையின்போது அவர் தெரிவித்துள்ளாராம். —இ-கி

இனப்பிரச்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டபின் எவ்வித அசம்பாவிதங்களுமின்றி அரசாங்க நிர்வாகத்தை மாற்றம்செய்த ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அவை அமெரிக்க வெளியுறவுச் செயலர் வொரன் கிறிஸ்தோப்பர் பாராட்டி இருக்கின்றார்.

இலங்கையில் மனித உரிமைகள் சம்பந்தமான விடயங்களும் பொருளாதாரச் சீர்திருத்தம் ஆகிய விடயங்களும் அமெரிக்க இலங்கை பேச்சுவார்த்தையின் போது முக்கியமாக ஆராயப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. —ம-கி-இ

வடக்கு-கிழக்கு

1-ம் பக்கத் தொடர்ச்சி

பத்திரிகையின் செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாளை விடியும் இந்த யுத்தம் நிறுத்தப்படவேண்டும் அதற்கு அரசாங்கம் அரசியல் தீர்வையே நாட வேண்டும் என்பதே 'ராவய' பத்திரிகையின் நோக்கம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை படைகளிடம் கிராமப்புறங்களிலுள்ள வறியவர்கள் தான் சேருகிறார்கள் அரசியல் தலைவர்கள் அவர்களை வைத்து வியாபாரம் செய்வது அச்சிப்பாய்களுக்குத் தெரியாது என்றும் ராணுவரீதியில் அரசு பிரச்னையைத் தீர்ப்பதில் உறுதியாக இருந்தால் அது இந்த நாட்டுக்கு மரணமாகவே சொந்தமாக வேண்டுவரும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். -கி

சுருக்கிட்டு தற்கொலை

(யாழ்ப்பாணம்)

சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக கருதப்படும் ஒருவரின் சடலம் நேற்று காலையாழ். ஆஸ்பத்திரியில் காவல்துறையினரின் உதவியுடன் ஒப்படைக்கப்பட்டது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அற்றோனிமுத்து மேரி பிரான்சிஸ் (50 வயது) என்பவரே சடலமாக ஒப்படைக்கப்பட்டவரென அடையாளம் காணப்பட்டுள்ளது. —வி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்ப்பாணம், கிவன் ரோவில் வேற்று வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ம் திகதி அச்சிடு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licenee Number B/10 336/B: